ஓலை 183| ஓசை 306| ஜூலை 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## கா. சுப்பிரமணியம் பிள்ளை

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**யான்எனது எனும்செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.**

## பொருள்

**‘நான்’ என்றும் ‘என்னுடையது’ என்றும் கருதும் அகந்தையை ஒழிப்பவன், தேவர்களையும் விட உயர்ந்த சிவ உலகத்தை / பேரின்ப நிலையை அடைவான்.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## என்னுயிர் இதயம்

பாவகை : எண்சீர் மண்டிலம்




என்னுயிரின் இதயமது துடிக்கிறதே தாயாம்
என்தமிழும் நலத்துடனும் வளத்துடனும் வாழ:
என்னுயிரும் வறுமையிலே சிதைந்திடினும் என்றும்
ஏற்றமுடன் தழைத்திடத்தான் பாடுபட்டு ழைப்பேன்;
அன்றாடம் நலிந்தேதான் நானிருந்த போதும்
அருந்தமிழின் மேன்மையுந்தான் உயர்ந்திடவே வேண்டும்;
கொன்றென்னைப் புதைத்தபோதும் கனித்தமிழின் சீர்மை
கதைக்காமல் என்னியிரின் துடிப்படங்கிப் போகா!

என்னுயிர்தம் இதயத்தின் அரியணையில் ஏற்றி,
இன்தமிழை அமரவைத்தே அழகாகப் பாடி
பொன்னெழுத்தால் அலங்கரித்தேன்; வணங்கியேதான் போற்றிப்
புகழ்கின்றேன்; பெரிதுவக்கப் பணிகின்றேன்; மூச்சாய்
என் ஈரக்குலையியங்கத் தமிழினையே நாளும்
இழுத்திழுத்தே உயிர்க்கின்றேன்; தமிழுணர்வை என்றன்
இன்தமிழர் நெஞ்சினிலே விதைக்கின்றேன்; வேற்றாம்
இழிமொழியால் பைந்தமிழும் சிதையாமல் காக்க!




பைந்தமிழும் பாரினிலே தழைத்திடவே மழையாய்ப்
பாங்குடனே பொழிகின்றேன்; ஆறாகப் பாய
செந்தமிழில் படைப்புகளைச் செதுக்குகிறேன்; மலையின்
சீரருவிப் போன்றுநானும் கொட்டுகிறேன்; வயலாய்
எந்தமிழும் விளைந்திடவே எருவானேன்; குலையின்
என்னுயிராய் நினைக்கின்றேன்; தமிழ்த்தாயை ஏற்றி
முந்திநின்று தன்னுயிராய் குலையுமேற்க வேண்டி,
வாழ்நாளை விதைக்கின்றேன்; எந்தமிழே வாழி!

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# நூல்நயம்

பாவகை : எண்சீர் விருத்தம் (மா+காய்+காய்+விளம்)

ஆற்றல் நிறைத்திடவே
அறிவினையே உயர்த்தவே
அகத்தைத் தூய்மையாக்கும்
ஆக்கமிக்க நூல்களே

ஊற்றாய்ப் பெருக்கிடுமே
உள்ளத்தில் நல்லதை
உள்ளி வாழ்ந்திடவே
உண்டாகும் நல்லிசை.

ஏற்றம் அடைந்தாலும்
ஏணியாக நிற்கலாம்
ஏதம் அகற்றிடவே
எழுச்சியுமே கிட்டிடும்.

போற்றிப் புகழுடனே
பொன்றாமல் என்றுமே
பூவின் மணம்போல
பூமிதனில் உய்யவே.



கவிஞர் செ. கலைவாணி

**1.**

நித்தமும் ஆயுளில் நிம்மதி தந்திடும்
புத்தனின் சொற்படி புரிந்திடு வாழ்விதை
வித்தகம் இல்லை விருப்பம் குறைத்திடு
சித்தர்போல் நீயும் சிரி.



**2.**

நனிநல் தமிழிலே நாளெலாம் பாட்டில்
தனியிடம் கொண்டவர் தாலசை வாணி
இனியெவர் இங்கே இசைக்கத் திரையில்
இனிக்கும் குரலின் இசை.

**3.**

சுரண்டியே சேர்த்துச் சுகத்தில் இருக்க
கரத்தல் வழியிலே கண்டதும் செய்வோர்
தரமிலா வாழ்விற்குத் தண்டனை உண்டு
தரணியி(ல்) எல்லாம் சமம்.

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி


# சதமடித்துக் கொண்டிருக்கும் நாட்கள்

நிசப்தத்தில் உறைந்திருக்கும்
மௌனத்தை
உடைக்கப் பார்க்கிறான்.
சாட்சியமற்ற இருள்
ஏதோவொன்றைச் சொல்ல
கனத்துக் காத்திருக்கிறது.
வெளிச்சம் கூப்பாடு போடும்
என்ற நினைப்பிருந்தும்
வருத்தமில்லை அவனுக்கு.
தூரத்தில் முளைத்து
நண்பகல் பக்கத்தில் நெருங்கி
மீண்டும் தூரத்தில் சரிந்து விழும்
சூரியன் அறியுமா?
ஆழ்மனதின்
நிழலலைப் பிம்பங்களையும்
துளிர்க்கும் நினைவலைகளையும்.
சதமடித்துக் கொண்டிருக்கும்
நாட்கள் கணக்கிடுவதில்லை
கரைந்துப் பின்வளரும்
நிலவின் கணக்கை.
புழுதிப் படிந்த மன அழுக்குகள்
அனைத்தையும்
அள்ளிக் கொட்டிவிட சம்மதம் தான்.
சகட்டுமேனி
சாக்கடைக்கும் மேல்
துர்நாற்றமெடுக்கத் தொடங்குமே
அதற்காகத்தான்
பாவம் பார்க்கிறேன் நான்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# உறவும் பகையும்



ஒரே நிழலில் நின்றோம் நாம்
ஒரே சிரிப்பில் கரைந்தோம் நாம்
கை பிடித்துக் கதை பேசிய காலம்
கண்ணோடு கண் பேசிய ஜாலம்!

ஒரு வார்த்தை தவறியதும்
ஒரு மௌனம் இடையில் வந்ததும்
உறவு விரிசல் கண்டது
பகைச் சுவர் எழுப்பியது!

இன்று பெயர் சொல்லக் கூட
நா தயங்கும் அளவுக்கு,
நேற்று உயிர் கொடுத்த உறவு
இன்று கல்லாய் இறுகிப் போனது!

ஆனாலும் இரவில்
பழைய பாட்டு வந்தால்
நெஞ்சின் ஓரம் ஏதோ அசையும்.
உறவு முற்றிலும் சாகவில்லை,
பகைக்குள்ளும் ஒரு ஈரம் இருக்கும்!

உறவும் பகையும்
ஒரே நாணயத்தின் இரு பக்கம்தானே?
திருப்பிப் போட்டால்
மீண்டும் தொடங்கலாம்தானே?
உறவென்றால் பகையும்
இருக்கத்தான் செய்யும்!

கவிஞர் முர்ஷிதா முத்தலிப், அக்குரனை (இலங்கை)

# அமைதி

அமைதி!
தேடிப் பார்க்கிறேன்,
தோற்றுப் போகிறேன்!
மீண்டும் மீண்டும் தேடுகிறேன்,
தோற்றுப் போகிறேன்;
தொலைத்த இடத்தைத் தேடி நிற்கிறேன்!



நாட்கள் வாரங்களாகின்றன,
வாரங்கள் திங்களைத் தேடி ஓடுகின்றன,
திங்களோ வருடங்களைத் தேடுகிறது!
ஆனாலும்...
இன்றுவரைக்கும் தொலைத்த அமைதி,
கேள்விக்குறியாக
விடையினைத் தேடி நிற்கிறது!

உனக்குள் தொலைத்துவிட்டு
ஊரெல்லாம் தேடுவது முறையா...?
புயல் வீசி ஓய்ந்த நிலை,
பூகம்பமே வந்து நிலைதடுமாறியும்
அமைதியைத் தருவதாய் இல்லை!

தொலைத்து நிற்கிறேனா...
அமைதி எனும் பூங்காவை?
அதுவும் எனக்குள்!

என்னை நானே மாற்றிவிட வேண்டும்,
எனக்குள்ளிருக்கும் பிடிவாதங்களைக் களைந்து,
பொறுமை எனும் விதையினை
அன்பால் விதைத்து,
அமைதி எனும் விருட்சம் அழகாய் வளர,
அமைதி எனும் விளைச்சலைக் கொடுத்து நிற்கும்!


அமைதி உலகில் இல்லை,
அமைதி உளம்தானே (உளத்தில் தானே)
உள்ளது என
அமைதி மௌனமாக மொழிந்தது!

கவிஞர் ஜீவனிநிரா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# என் தேடலில் அவள் ராதை

அன்று இன்று என்று நான் சென்று,
என்னவளைக் காண தினம் நின்று,
அவளின் தேடலில் மட்டுமே தொடர்கிறேன்;
என் தேடலில் அவளை மட்டுமே
நான் தொடர்கிறேன்,
இன்றும் என்றும்!

காலம் சொல்லாத பதிலை
இன்று என் காவிய வரிகள் சொல்கின்றன;
அதை மெல்ல முடியாமல்
தினம் என்னைத் தள்ளுகிறது,
என்னவளின் தேகத்தைக் கொண்டு
என் மனம் நின்று!



கவிஞர் ம. செல்லமுத்து, பெரம்பலூர் மாவட்டம்

# அவளுக்கென்று என்ன உள்ளது?



பெண்ணென்று பூமியில் பிறந்தது ஏனோ?
பிறர் பலிசொல்லைத் தாங்கிடத்தானே?
மலர் போல் இருக்கும் புன்னகை,
மனதினில் இல்லாமல் வாடுவது ஏனோ?

மங்கை அவள் மகளாகப் பிறக்கிறாள்;
மாணவியாக மண்ணில் மிதக்கிறாள்;
மனைவியாக இல்லறத்தை நடத்துகிறாள்;
தாயானதும் தன்னை அனைத்துக்கும் அர்ப்பணிக்கிறாள்!

அவளுக்கென்று இவ்வையகத்தில் என்ன உள்ளது...?
அன்பை மட்டும் கேட்டு நிற்பதில் என்ன தவறு உள்ளது...?
அதனைக் கொடுக்க மறுப்பது நல்லதா?
பொறுமையின் சின்னத்தைச் சிதைப்பது நல்லதா?

சிரித்துச் சிரித்துத் துயரத்தை மறைப்பவள்,
சிந்தித்துச் சிந்தித்து வீட்டுச் சிறையில் இருக்கிறாள்!
மன்னித்து மன்னித்து மனதை ஆற்றுகிறாள்;
மயக்கத்தில் இருக்கும் அவளைக்
கலக்கத்தில் ஆழ்த்தாது வைப்பதே நல்லது!

கவிஞர் பானு ஜிப்ரி, சாய்ந்தமருது (இலங்கை)

முந்து முறை திரித்த ஒன்னார்
முந்நீர் குமரன் கோட்டம் ஒறுக்க
முளரி ஏந்தும் நெடுங்குன்றுக் கூளி
முரண் வெல்லும் தமிழ்.




கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# விழியசைவில் வீழ்ந்தேனடி

புன்னகையில் பூத்த
புதுமலர் நீதானோ?
புத்துணர்ச்சி தந்திடும்
புதுமைப் பெண்ணே!

புள்ளியிட்ட கோலமாய்
புகுந்திட்ட என்னவளே!
புத்தியும் மாறியதே,
புதுப்புனல் உண்டானதே!

புருவம் வளைத்துப்
பருவத்தைக் கொல்கிறாயே!
புலர்ந்திடும் வேளையில்
புன்முறுவலுடனே வந்திடு!

புறாவைத் தூதாக்கியே
புலவன் ஆனேனே!
புன்னகைப் பூவே,
புது வெண்ணிலவே!

புரிந்திடு என் மனதை,
புத்துணர்வு அடைவேனே!
புல்வெளியில் நனைந்த
புழுவாய் குளிர்கிறேனே!



புதுமணப் பெண்ணாய் மாறிடு,
புக்ககம் அடைந்திடு!
புதுக்கவிதையின் புதுமையாய்
புல்லரிக்கச் செய்பவளே!

வியப்பான எழிலாளின்
விழியசைவில் வீழ்ந்தேனடி!
அழகான புள்ளிமானே,
அருகினில் வாராயோ?

இதழமுதம் பருகிட
இதயமும் இதமாகுமே!
காந்தமாய் ஈர்த்திட்ட
காதல் நாயகியே!

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# பெண்ணின் வளர்ச்சி

பெண் என்றவள் இந்த இழிவான
சமுதாயத்தில், தன் அங்கீகாரத்திற்காக
வாழ்ந்து வருகிறாள்.
அவளைச் சீண்டிப் பார்ப்பதில்
என்ன சுகம் கண்டார்களோ?

தன் இலட்சியத்தை அடைய வேண்டும்
என்ற எண்ணத்தில்,
ஓடிக்கொண்டே இருக்கிறாள்.
நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று
நினைத்தே வாழ்க்கை நகர்கிறது.

வாழ்க்கையின் நோக்கமே,
பிடித்ததைச் செய்து
மகிழ்ச்சியாக இருத்தலே
அவசியமான ஒன்று!



கவிஞர் மா. மோனிஷா

# அழகே உன்னை ஆராதனை செய்கிறேன்




அழகென்ற சொல்லுக்கு முருகனின் அருளென்ற பொருளுண்டென,
அன்னைத் தமிழின் பக்திப் பாடல் ஒன்றெடுத்து ஓதும்;
அடியவன் சிறுவனாய் இருந்தவேளை பார்த்ததுண்டு,
"அழகே உன்னை ஆராதிக்கிறேன்" என்ற திரைக் காவியத்தை;
அதிலும் என்னை கவர்ந்தது ஒரு பாடல், அப்படத்தின்
"அழகே உன்னை ஆராதனை செய்கிறேன்" என்பதாமே!

ஆசிரியப் பணியில் என்னிடம் பயின்ற மாணவியொருவர்,
"ஆராதனா" என்ற பெயர் பெற்றிருந்தது என் நினைவிலுள்ளது;
"ஆர்த்தி" என்ற பெயரிலும், "செண்பகவல்லி" என்ற பெயரிலும்,
ஆசிரியப் பணியில் பல மாணவிகளை அடியேன் சந்தித்ததுண்டு;
ஆர்த்தி என் நகரின் கைராசியான பெண் மருத்துவரின் பெயரே,
அருள்பாலித்துக் கோவில்பட்டி காக்கும் தாயே செண்பகவல்லி!

அழகியல் சிந்தனை இல்லா மனிதர் நம்மிடையில் இல்லை இன்றும்;
அழகெதுவென வினவினால் ஆயிரமாயிரம் விடை வரும்;
அழகென்பது வெள்ளை நிறத்தில் உள்ளதென்பார் பற்பலரானாலும்,
அடியேன் எந்தன் ஆசிரியப் பணியில் வெள்ளைவேளீரென நிறத்தவளாய்
அமர்ந்திருந்த இறுதிப் பலகை மாணவியொருத்தியைக் கண்டு,
அரண்டுபோனேன் பேயோ பேயோ என்று, திரைப்படங்கள் அப்படி காட்டுகின்றதால்!

அனைவர் மனத்திலுமிருந்த வெள்ளை நிற மோகத்தைக் குறைய வைத்தது,
அற்றை நாளில் வந்தவொரு திரைப்படப் பாடல், "கருப்புதான்
எனக்கு புடிச்ச கலரு" என்றாலது மிகையில்லை;
எம்மவர்கள் தலையில் முடியில்லை என்றால்,
எவ்வளவு அழுகின்றார், எவ்வளவு அதற்குச் செலவழிக்கின்றார் அதை
எண்ணிப் பார்த்தால் எனக்கு வருகிறது சிரிப்போ சிரிப்பு!

அகவை ஐந்து வரை வாய் பேச இயலா ஊமைப் பாலகன், முருகன்
அருளினால் பாடினான் "கந்தர் கலிவெண்பா"; அவரே
அருளினார் நாமெல்லாம் நம் வாழ்வில் உய்ய "நீதிநெறி விளக்கம்" அதில்,
அழகென்பது கல்வியால் வருவதென எடுத்தியம்பினாரே;
அதனினும் மேலான உண்மை உலகில் வேறெதுவும் இல்லையென்பதால்,
அழகாம் கல்வியை அடியேனும் நாளெல்லாம் ஆராதிப்பேனே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# பள்ளிக்கூடம்

மறக்க முடியாத
நினைவுகளின்
இருப்பிடம்!


மதங்கள் தெரியாத
மனங்களின்
அழகிய பூந்தோட்டம்!

சாதிகள் தீண்டாத
இதயங்களின்
கருவறை!

நட்பின் சிறகுகள்
சிறகடிக்கும்
நந்தவனம்!

ஆசிரியர்கள் என்னும்
தெய்வங்கள் குடியிருக்கும்
ஆலயம்!

என்றுமே குறையாத
கல்விச் செல்வத்தின்
வசிப்பிடம்!



எதிர்காலத்தின் ஏணிகளாய்
திகழும்
பள்ளிக்கூடங்கள்

இல்லையெனில், உலகமே
இருளின்
முகமூடியாய்!

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# கை கொடுக்கும் நல்வினைகள்

வினையென்பதை வள்ளுவன்
விரும்புமொரு செயல் என்பான்;
துன்பம் வந்தபோதும் ஒருவன்
இழிவான செயலைச் செய்யான்!



நல்வினை தீவினை இரண்டுமே
வாழ்வின் கோலத்தை முற்றிலும்
மாற்றும்; இவற்றில்
கூட்டலுமுண்டு கழித்தலுமுண்டு!

முன்னேற்றமென்பது கலங்காது,
காலம்தாழ்த்தாமல் சோர்வற்று,
செயலுறுதியை முன்னிறுத்தி,
வெற்றி இலக்கை அடைவது!

வினை தூய்மையற்றுத் தகாதவை
என்றிருக்க, துன்பமவன் கை
பிடித்து நடக்கும்; இறுதியில்
அழுகையே அவனுக்கு மிஞ்சும்!

கைகொடுக்கும் நல்வினையை
முழுமையாக அறிந்தவரின்
கருத்துகள் ஏற்கப்படும்; அவர்தம்
ஆலோசனைகள் அமலாகும்!

நல்வினையின் முதல் பார்வை;
பொருள், கருவி, காலம், இடம்,
செய்யும் முறை இவ்வைந்தும்
ஆராயப்படும் அறிவுபூர்வமாக!

நல்லதுணை செல்வம் தரலாம்;
நல்ல செயல்களான வினைகள்
விரும்பிய அனைத்தையும் தரும்,
இதனால்தான் இது நல்வினை!

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

# இருபத்தாறு வருடகால வசந்தங்கள்

இருபத்தாறு வருடங்கள்!
நாட்காட்டியில் பக்கங்கள் புரண்டதே தவிர,
நம் நட்பில் ஒரு நாள்கூடத் தூசு படியவில்லை!

அன்றைக்குப் பிரிந்தபோது,
வகுப்பறைச் சிரிப்பும்,
கடைசியாக அமர்ந்து பேசிய கதைகளும்,

கடன் வாங்கிய டிபன் பாக்ஸும்,
நேற்று விட்டுவிட்டு வந்ததுபோல இருக்கிறது!



முடி நரைத்திருக்கலாம்,
கண்ணில் காலம் கோடு போட்டிருக்கலாம்;
ஆனால், கட்டியணைக்கும்போது
அதே பதினாறு வயதுப் பெண்ணாக
மாறிவிடுவோம் அல்லவா?

வார்த்தைகள் தடுமாறும்,
கண்ணீர் வார்த்தைக்கு முந்தி நிற்கும்;
"எப்படி இருக்கிறாய்?" என்ற ஒரே கேள்வியில்,
இருபத்தாறு வருடக் கதையும் அடங்கிவிடும்!

நட்பென்றால் வயதில்லை,
இடைவெளியுமில்லை;
சந்தித்த மறுநிமிடமே,
மறுபடியும் நாம் அதே நாங்கள்தான்!

வாருங்கள்... ரொம்ப நாள் ஆகிவிட்டது,
இந்தத் தடவை பிரியவே கூடாது;
ஒன்றாக இணைவோம், கதைப்போம்,
உணவைச் சுவைப்போம்!
எம்மை மீண்டும் சந்திக்க வைத்துச்
சிந்திக்கச் செய்த
இறைவனுக்கே எல்லாப் புகழும்!

இதே நட்பு என்றுமே போல்
ஜொலிக்க வேண்டும்,
நிலைக்க வேண்டும்!

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குரனை (இலங்கை)

உயர்த்தி வைக்கும் ஏணியாய்.
ஒளி படைத்த வாழ்வினால்
உச்சத்தில் வைக்கும் நம்மையே.

அறிவென்னும் ஆயுதமே
உயர்த்தி வைக்கும் மனிதனை.
சமூகத்தின் இருட்டையே
விரட்டி விடும் வல்லமை
கல்வி என்ற ஒன்றுக்கே
சாத்தியமான சத்தியமே.

மனிதனை அறிவாளியாய்
சமூகத்தில் அதிகாரம் மிக்கவனாய்
மாற்றும் ஆற்றல் கொண்ட
"அறிவாயுதமே" கல்வி என்னும்
பொக்கிஷமே.



சாதாரண மனிதனையும்
சாதனையாளனாய் மாற்றியே
அழியா செல்வமும் நிலையான புகழும்
வாழ்வில் வந்து சேருமே.

எண்ணும் எழுத்தும் கண்ணென போற்றும்
குணம்தான் வேண்டும்; தான் கற்ற கல்வியே
தனக்கும் தான் பிறந்த உலகுக்கும்
ஏழேழு பிறவிக்கும் பலன் தரும் அமுதமே

காலத்தை வெல்லும் கல்வி என்னும் பேராயுதம்
சமூகத்தை மாற்றும் சாதனையைப் படைக்கும்
கோடை காலத்திலும் நீரூற்றாய்
எந்நாளும் பயன் தரும்.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம்

# கொக்குகள்



ஒய்யாரமாய் நடப்பவைதான்
கொக்குகள்.
உயரமும் மிடுக்கும்
கூடவே பிறந்ததால்
பெண் குழந்தைகளுக்கும்
பிடித்துத்தான் போகிறது.

வெள்ளை போர்த்திய
இந்தக் கொக்குகளின்
அகம் பற்றி
யாருக்கும் புரிவதில்லை.

கலக்கலான சிறகசைப்பும்,
அலகின் அழகும்
தலை நிமிர்ந்த பார்வையும்,
யாருக்குத்தான் பிடிக்காது?

மாமா முறை கொண்டாடியும்,
அண்ணா, அப்பாவென்றும்
தாத்தா, சிற்றப்பாவென்றும்
உறவு முறைகளை
கொண்டாடித் தீர்க்கின்றன,
கபடமற்ற குழந்தைகள்.

இந்தக் கொக்குகள் கவனம் செலுத்துவது
பெண் குழந்தைகளென்பதை,
கண்டுபிடிக்கத்தான் ஒரு
கருவி செய்ய வேண்டும்.

கவிஞர் சம்மாந்துறை மஷூரா, இலங்கை

# நெகிழியின் தாக்கம்

பூமிப்பந்து திணறுகிறது தன்னுள் சுவாசமின்றி
ஆலகால விடமொன்று ஆட்கொல்லியாய் அழுத்துகிறது
இயற்கை அன்னையின் இதயம் நீலமாகிறது
செயற்கை நெகிழி சிந்திடும் அமிலத்தால்
உயிர்களின் அழிவினைக் கண்கொண்டு காணவொண்ணா
பயிர்களின் வேர்களெல்லாம் பரிதவித்து அவிகிறதே
ஐயகோ! மனிதர்காள் ஏனிந்த அரக்கத்தனம்
பையப்பைய பாழ்படுதே பட்டினியும் வந்தாடுதே
நாநிலமெல்லாம் நீரின்றி நாசமாய்ப் போகுதே
நம்மக்களின் வருங்காலம் வாழ்விழந்து நிற்குமே
நிறுத்துங்கள் நெகிழியை உறுத்தலுள்ள அறிவுடனே
பொறுமைகொண்ட மண்மடியை பொன்னாய்ப் போற்றுங்கள்
மண்தந்த பொருள்கொண்டு மாற்றுவழி காணுங்கள்
நிலமகளை மலடியாய் மாற்றாதுப் பேணுங்கள்



கவிஞர் ஐமுனா ஜெகன். நாகர்கோவில்

# தடையுடை

புயலே புரட்டிப் போட்ட பின்பும்
பட்டாம்பூச்சிகள் சிறகை விரிக்கும்
பட்டுப் போவதல்ல வாழ்க்கை
கரங்களை விரித்தால்
காத்துக் கிடக்கிறது
காட்டுப் பூக்களின்
கலங்காத இயற்கை

இளைப்பாற இடமில்லாவிட்டாலும்
கடலையும் தாண்டிடும்
பறவைகள் உண்டு
பறவைகளே இப்படி என்றால்
பட்டறிவு மானிடா - நீ
சோர்ந்து போவதும் ஏனடா?

இலைகள் விழுந்தாலும்
துளிர்கள் விழுவதில்லை
மேகம் மறைத்தாலும்
சூரியன் விடுவதில்லை

துணிந்து செல்! - முயற்சியை
அணிந்து செல்!
வெற்றி பணிந்து வரும்
இனிமை இணைந்து வரும்
காலம் கனிந்து வரும் - நாளைய
வரலாற்றைச் சுமந்து வரும்!



எதிர்ப்பதை எரித்து விடு
தடுப்பதை உடைத்துவிடு
இறுதிவரை போராடு
இமயம் வரும் வேரோடு

வேர்கள் பாறையைப் பிளக்கும்
எறும்புகள் பாறையைத் துளைக்கும்
அருவிகள் பாறையை அறுக்கும்
மனிதா நீ பாதையை மாற்று
வெற்றி முளைக்கும்
இலக்கு செழிக்கும்
மேகமும் வந்திறங்கி - உனக்கு
வாழ்த்து கொடுக்கும்

வென்று வா! வெற்றியைத் தாண்டி
வென்று வா!

கவிஞர் சி. முத்தரசன், அரியலூர்

# சின்ன சின்ன அன்பில் தானே!

சின்னச்சின்ன அன்பிலேயே
சிங்காரமே அருகிலேயே.
உணர்வுகளின் அலைகள்
உயர்ந்தோங்குமே மகிழ்வினிலே.

காண்பவை இனியவையாய்
காய்த்திடும் கனிகளாய்.
கொஞ்சும் கனவுகளும்
கொண்டாடிடும் விண்ணகமாய்!



உறவுகளின் நிலைகள்
உன்னதமாய் உணருமோ?
மனதிற்குள்ளே சாரலாய்
மணக்குமோ பூந்தென்றலாய்.

வானவில்லின் விரிவுகள்
வாழ்விதழின் ஓவியமோ?
அன்பின் சங்கிலிகள்
அடங்குமோ மௌனத்திற்குள்ளே?


கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# நேர்மையின் நாயகன்

எளிமையின் உருவம் காமராஜர்,
ஏழைகளின் இதயம் கவர்ந்த தலைவர்!
கல்வியின் தீபம் ஏற்றிவைத்தார்,
குழந்தைகளின் எதிர்காலம் செழிக்க வழிசெய்தார்!


பதவியை விட மக்களை நேசித்தார்,
பணிவால் உலகம் போற்றும் மனிதரானார்!
நேர்மையும் தியாகமும் வாழ்வின் வழிகாட்டி,
நாட்டின் பெருமை நம் கர்மவீரர் காமராஜர்!

மக்களுக்காக வாழ்ந்த மகத்தான தலைவர்,
காலம் கடந்தும் நிலைத்திருக்கும் பெயர் — காமராஜர்!



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# காகிதக் கப்பல்



மழைத்துளி மடியிலே
மடிந்தது ஒரு காகிதக் கப்பல்.

குழந்தையின் கரங்களில் பிறந்தாலும்,
கற்பனையின் கடலில் வளர்ந்தது.

சிறு ஓடை கண்டவுடன்,
பெருங்கடல் கண்டதாய் புன்னகைத்தது.

காற்றின் விரல்கள் தொட்டபோது,
திசைகளை மறந்து பயணித்தது.

அலைகள் அதனை அச்சுறுத்தவில்லை;
அவை பாடம் கற்பித்தன.

ஒவ்வொரு திருப்பத்திலும்
ஒரு புதிய நம்பிக்கை முளைத்தது.

நீரில் நனைந்த உடல்
மெதுவாகக் கரைந்தாலும்,

அதன் கனவுகள் மட்டும்
கரைய மறுத்தன.

வாழ்க்கையும் அப்படித்தான்;
உடல்கள் காலத்தோடு மாறலாம்.

ஆனால்,
தூய கனவுகளின் பயணம்
ஒருபோதும் முடிவதில்லை.

ஒரு குழந்தையின்
சிறிய காகிதக் கப்பல்,

உலகுக்கே சொல்லிச் சென்றது:

"பயணத்தின் நீளமல்ல,
நம்பிக்கையின் ஆழம்தான்
வாழ்க்கையின் உண்மையான கரை."

கவிஞர் திருமதி சினேஹா வினய், சென்னை

# காதல் ஆழியே

எண்ணப் புயலே
உன்னில் சாய்ந்தது
என் மனம்.

காதல் கரையில் நின்றவன்,
உன் விழியின்
ஆழக் கடலில் மிதக்கிறேன்.

கரை காணாத தோணியாய்
தள்ளாடுதடி
என் இதயம்.

திருமணக் கயிற்றால்
என்னைக் கட்டி இழு,

இதழ்ச் சிப்பிக்குள்
மூழ்கி நான்
முத்தெடுக்க.

நீந்தி நீந்தி
கரை தேடி அலைகிறேன்.
மீண்டும் மீண்டும்
நினைவலையில் கரைகிறேன்.

எந்தப் பக்கம் போனாலும்
உன் கனவின் கரைகள்
என்னைச் சூழ்கின்றன.



அல்லும் பகலும்
என்னோடு பேசும்
வெண் சங்கின் ஒலிகளில்
ஒலிக்கின்றன
உன் காதல் ஓசைகள்.

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

போர் கண்ட மனதோடு
ஆயுதமில்லாச் சண்டையிட்டு,
அர்ப்பணிக்கப்படும் நினைவுகளை
ஆராதிக்க மறுக்கும்
ஆத்மார்த்த இதயத்திற்கு
இரங்கல் செய்திதான்.



தினங்களை அழகாக்க
திடீரென வருபவர்களுக்கு
தினத்தந்தி வருத்தங்கள்
தினம் மனம் போய்ச் சேராது.

செதுக்கப்பட்ட ஆசைகளுக்கு
புதைக்கப்பட்ட காலங்கள்,
காரணத்தோடு காட்சிகளை
புழுதி கிளப்புகிறது கண்ணில்.

கைமாறிய நினைவுகளுக்கு
காவல் சிறையில் அடைத்தாலும்,
கடுங்காவலைத் தப்பித்து
கல்லறையிலும் பிறக்கின்றன
நினைவின் விழுமியங்கள்!

கவிஞர் டோ. மெர்லின் மரியா

## நிலவு



(1)

நிலவு வெளிச்சம்
இரவு விளக்கு
தொடர் ஒளி பாதை



(2)

இரு புறாக்கள்
இருட்டும் வெளிச்சமும்
பிறை நிலவு உலா



(3)

கருநீல வானம்
வெண் மேகத்திரள்
மஞ்சள் நிலா ஒளி

(4)

அந்தி வானம் சிவப்பு
சூரியன் மறைவு
வெண்ணிலவு தோன்றல் வனப்பு



(5)

மினுங்கும் விண்மீன்கள்
நீல வானம்
பால் நிலவு பாதை



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

பலமாய்ப் பாய்கின்ற போது,
நரம்புகளைச் சிலிர்க்க வைக்கும்
தேகம் பாய்ந்த மின்னலாய் ஓர் உணர்வு!
காயாத காய்ச்சலைக் காயவைக்கும்!
வெளியே வர முடியாமல் உடலே
ஒழிந்து கொள்ளும்!



தென்றலாய்த் தோல் வருடும் போது,
இதயம் சாய்மனையில் அமர்ந்து கொள்ளும்!
பசுமையே இல்லை என்றாலும்,
பூங்காவனத்தில் நடப்பதான ஓர் நினைவு!...

முகம் கொடுத்து... கண் தொடுத்து,
மெதுவாய்த் துயில் கொள்ளும்
மங்கலமான மயக்கம்... அங்கு!

காற்றே!

நீ வெயிலின் கொடுமைக்குள்
பச்சோந்திப் புன்னகை.
இரு முகம் கொண்டு
இருமாப்புக் கொள்கிறாய்!

உஷ்ணத்தின் உதடுகளுக்குள்
நசுக்கப்படுகிறாய்,
உன் உன்னத நிலை மறந்து!

நாணயத்தின் மறுபக்கம் போல்
அக்கினி ஏப்பமிடுகிறாய்,
அங்கங்கள் கண்ணீர் விடுவதற்காய்!

வளியே!
வழி மறந்து விடாதே!
உன்னைத் தொடர்வது நான்
என்று தெரிந்தும்!

கவிஞர் சேஹ் மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லா

என்னருமைத் தோழா!
இடிந்த மனதுடன்
கேட்கிறேன்.


நாம் ஆடிய வீதி எங்கே?
அழுத கண்ணீர் எங்கே?
சின்னம் சின்னமாய்ப் பூக்கும்
சில்மிஷங்கள் எங்கே?

எமக்குள் நாம்
செய்த குறும்புகளின் அலை,
உன் மனக் கரையில்
அடித்துக் கொண்டே
இருக்க வேண்டும்.

உன் விழிகளுக்குள்
என்னை மூடிக் கொண்டாய்.
உன் நெஞ்சுக்குள்
என்னை அடைத்து விட்டாய்.

எனக்கு வேதனையின்
விம்மல் கூட இல்லை.
ஏன் தெரியுமா?

நான் மகிழ்ச்சிக் கடலாகிய
உன்னுள் உள்ளேன்.



கவிஞர் அக்பர் இனுல் முன்சிலா, மருதமுனை

# மாய நதியா இந்த காலநதி?



நாளும் கிழமையும்
வேகமாக ஓடுகிறது;
காலச் சக்கரம்
வேகமாகச் சுழல்கிறது.

ஆனால், எங்கள் கவலையின்
சுமைகள் மட்டும்
குறையாததேனோ!

கவலையும் கண்ணீரும்
காலத்தின் கோபமா? கோலமா?
மீள வழியின்றித் தவிக்கிறேன்.

காலம் ஓர் மாய நதியோ!
அது சுழற்றிப் போட்டுக் கொண்டு போகிறது.

கண்ணீருடன்
என் வாழ்க்கை
பின்னோக்கிச் செல்கிறது.

என் நினைவுகள்
அமைதியான நதியில் பயணித்த
தடத்தைத் தேடுகிறதே.

அந்தத் தடத்தைக்கூட
தடயமில்லாமல்
அழித்துவிட்டு,

என்னைக் கரையில் ஒதுக்கி,
கண்ணீர் விட வைத்துவிட்டு
ஓடிச் செல்கிறது
இந்தக் காலநதி.

கவிஞர் சுமதி தசரதன்

# காணாமல் போன உறவுகள்!



காலச் சக்கர வழியில்
காயங்கள் துடைத்து, கண்ணீர் விட்டு,
தேடித் தேடிக் களைத்து விட்டேன்
காணாமல் போன என் உறவுகளை.

கையிருப்பில் பணம் இருக்கையில்,
கவரும் பொன்னும் பொருளும் இருக்கையில்,
என்னைத் தேடி வந்த உறவுகளை
எங்கு நான் தொலைத்தேனோ!

பட்டம், பதவி இருக்கையில்,
பேரும் புகழும் பெறுகையில்,
கை கொடுத்து உறவாடிய உறவுகளை
எங்கு நான் தொலைத்தேனோ!

பட்டு மெத்தை விரிக்கையில்,
பஞ்சம் தீர்த்து வாழ்கையில்,
வாழ்த்த வந்த உறவுகளை
எங்கு நான் தொலைத்தேனோ!

உயரம் கண்டு சிரிக்கையில்,
உச்சம் தொட்டுச் சிலிர்க்கையில்,
பக்கபலமாய் "நாம்" என்ற உறவுகளை
எங்கு நான் தொலைத்தேனோ!

துன்பம் என்னுள் வருகையில்,
வீழ்ச்சி என்னைத் தாக்குகையில்,
உறவு கொண்டாடிய உயிரெல்லாம்
பிரியாவிடை தந்ததேனோ, உறவுகளே!

வளம் கூடி இருக்கையில்
உறவாடி மகிழ வருவீரோ?
விதியின் வலிகளைச் சுமக்கையில்
வேடிக்கையாய் காணாமல் போவீரோ?

கவிஞர் அகீலா ஐவுபர், ஏத்தாளை, புத்தளம்

# பூவொன்றை

காயப்பட்ட உள்ளம்
தன்னை எங்கேனும்
செதுக்கி வைக்கவே தவிக்கிறது.

ஒரு ஒற்றைக் குற்றச்சாட்டில்,
திடுமென உங்களின்
ஒட்டுமொத்த மலர்வனத்தைப்
பிடுங்கிச் சாக்கடையில் வீசுகிறார்கள்.


அதற்கு முன் நீங்கள் சிந்திய
நறுமணத் துளிகள் எதுவும்
நினைவுகூரப்படுவதில்லை.

மலையளவு நன்மைகளும்
கடுகளவாய்ச் சுருங்கிப் போகின்றன.

வீசியவர்கள்
சாக்கடையைத் திரும்பிப் பாராமலே
கடந்து போகிறார்கள்.

புறக்கணிப்பு என்பது
பூவொன்றை நசுக்குவது மட்டுமல்ல;
நசுக்கிய சுவட்டின் மேல்
நன்றிகெட்டு உமிழ்வது!

அது
புரிதலை வேண்டுமென்றே துறந்து,
உயிரில் தீ வைப்பது!



கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# மனிதன் மட்டும்

தலைகீழாய்
விழும் அருவிக்கு
மரண பயம் இல்லை.

கோபுரத்தின்
உச்சியில் இருந்து
பறக்கும்
குருவிகளுக்கு
உயரம் பற்றிய
பயம் இல்லை.

பகிர்ந்து உண்ணும்
பண்பாட்டை
பாருக்கு உணர்த்தும்
காகங்களுக்கு
அடுத்த வேளை
உணவைப் பற்றிய
அச்சம் இல்லை.

நீண்ட காலமாக
நிலைத்து நிற்கும்
மரமானது,
வசந்த காலம் வந்தது என்று
வானுக்கும் பூமிக்கும்
குதித்தது இல்லை.

இலையுதிர் காலத்திற்காக இதயம்
இளைத்ததும் இல்லை.



தானாய் வற்றும் வரை
தேனாய் ஓடிக் கொண்டிருக்கும் நதி,
கொதிக்கும்
கோடை காலத்திற்காக
வருந்துவதும் இல்லை.


ஆனால்
மனிதன் மட்டும்.
இன்பம் வந்து விட்டால்
பேயாட்டம்.

துன்பம் வந்து விட்டால்
எலும்புத் துண்டுகளுக்கு
அலையும் நாயாட்டம்.

கவிஞர் முனைவர் அ. ச. மு. முனியாண்டி

# காதல் மகராணி

கொஞ்சம் கூடுதலாய்
பெற முடியாத என் தவிப்பை உணர்ந்து,
அஞ்சலில் நீ அனுப்பும்
கடிதத்தில் இருக்கிறது
களையாத உன் இதழ்முத்தம்!
இருளின் மை
கூடத் தொடங்கிய
ஓர் மழைநாள் இரவில்,
ஒரு கைப்பிடி புன்னகையோடு
நீ காத்திருந்த தருணத்தில்தானே
நம் காதல் பிறந்தது!
வலைக்குள் அகப்பட்ட நண்டுபோல்
புரண்டு சிரிக்கும்
உன் கூந்தலைப் படிக்கும்
கொடியிலிருந்து குதித்து வந்த
மல்லிகைப்போல்
மாறத்தான் ஆசை;
நீ மனமிறங்குவாயா?
இப்படி நம்முள் நடக்காத ஒன்றை
நானே தொடுத்து
நம்பிக்கை வளர்க்கிறேன்.
காதல் மகராணி,
நீ கண் திறக்க.



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

நாடொன்று பிறநாட்டோடு
வணிகம் செய்ய ஒப்பந்தமுண்டு
அனைத்துப் பயன்களுமதில்
தெரிவித்து தெளிவாயிருக்கும்

தடையற்ற ஒப்பந்தம் என்பது
நாட்டின் அதிக நலனுக்கானது
இந்தியா இங்கிலாந்து நாடுகள்
பன்னிரண்டுலச்சம் கோடிகட்கு




தடையற்ற ஒப்பந்தம் போட்டது
இந்திய பொருட்கள் பலவுண்டு
வரிகளே இல்லாது இறக்குமதி
ஏற்றுமதி பெரும் வாய்ப்பிதில்


திருப்பூர் பின்னலாடை மட்டுமே
பதிமூன்றாயிரம் கோடி உயரும்
இந்திய தோல்பொருட்கள்
காலணிகள் கடல்சார் உணவு

மஞ்சள் மற்றும் பதப்படுத்தப்பட்ட
பலவும் பட்டியலில் வருகின்றது
பங்குச்சந்தை உயரும்
நல்ல பயனாளர்கள் அதிகரிப்பர்

உலகமே போற்றும் இந்தியப்
பொருட்களின் உத்வேகம் கண்டு

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார் (சென்னை)

# கர்மவீரர் காமராஜர்



கர்மவீரர் பட்டமெனும்
கண்ணியத்தைக் காத்தவரே!
உண்மை, நேர்மை, வாய்மையால்
உலகம் போற்றும் உத்தமரே!

படிக்காத மேதையாய்ப்
பல கல்விச் சாலை தந்தார்;
படிக்கும் ஏழை மாணவர்க்குப்
பசியைப் போக்கும் வழி செய்தார்.

மதிய உணவுத் திட்டமெனும்
மகத்துவத்தை விதைத்தவரே;
கல்விச் செல்வம் அனைவருக்கும்
கிடைக்க வழியை அமைத்தவரே.

இல்வாழ்வைத் துறந்தவராய்
இனநலமே பெரிதென்றார்;
நாட்டின் நன்மை ஒன்றையே
நாளும் நினைத்து உழைத்தவரே.

விடுதலைப் போரின் வீரர்,
விருப்பமில்லா தியாகியார்;
தன்னலத்தைத் துறந்தவரை
தலைமுறைகள் தொழுகின்றன.

இரண்டு கதர் ஆடையுடன்
எளிமை வாழ்வை ஏந்தியவர்;
சிக்கனத்தின் சின்னமென
சிறந்த வாழ்வைக் காட்டியவர்.

டெல்லி சென்ற வேளையிலே
தேசியப் பணியில் நின்றபோது,
எடை பார்க்கும் இயந்திரத்தில்
ஏறிட நாணயம் இல்லையாம்.

ஒரு ரூபாய் நாணயத்தை
நேருவே போட்டு நிறுத்திட,
எளிமை வாழ்வின் உயர்வை
எல்லோருக்கும் உணர்த்தினாரே.

விருதுநகர் வீரரான
வீர காமராஜர் வாழ்க!
உலகம் போற்றும் புகழெல்லாம்
உயர்ந்து என்றும் ஓங்குகவே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# என் விழியின் தேடல் இவள்


தவறி விழும் போதெல்லாம்
தோள் தருவதால்
அவள் தோழி...

வெறுப்பைக் காட்ட முடியாத
ஓர் அன்பைத் தந்து,
தடுமாறும் போது
தட்டிக்கொடுப்பவளே
தோழி...

எண்ணிலடங்கா உறவுகள்
இவ்வுலகில் இருந்தாலும்,
இம்மண்ணில் பாசத்தை
அள்ளித் தரும் ஓர்
உறவு தோழி...

என் முகச்சோர்வை
சிறு புன்னகையால் நீக்கி,
என்னைச் சிரிக்க வைத்துப்
பார்ப்பவளும் என் தோழி...

காலம் கடந்தாலும்,
நம் நினைவுகள் என்றும்
நிலைத்திருக்கும்,
தோழியே!



கவிஞர் காஜா முகைதீன் பாத்திமா நிம்ஸியா, மூதூர் – 01

குருத்தாய் பிறந்த
கீற்று,
காற்றுடன் பயணித்துப் பார்த்து
ஓலையானது.

வீழ்த்தப்பட்ட அந்த
தென்னையோலையின்
எஞ்சியிருக்கும்
தென்னங்குச்சிகள்,

இந்தக் கரடு முரடான
பூமியைப் பராமரிக்கும்
பணியில் இருப்பதால்தான்,
அந்தத் தென்னங்குச்சியின்
முனைகள்
இப்போது கூர்மையாக
மாறியுள்ளன.

ஆம்,
வாழ்க்கையும்
இப்போது
கூர்மையாகத்தான்
உள்ளது.



கவிஞர் இரா. மதிராஜ், அலப்பட்சாக் கவுண்டன் புதூர்


# சுவாசமாய் நீ

காதலெனும் ஓவியம்
தீட்டினேன்;
வண்ணங்களும் கற்பனையே,
வரிகளும் கற்பனையே.

ஆனால், நீயும் நானும்
நிஜமாகிப் போனதால்,
உன் மனதின் ஓசை கேட்டு
என் இதயம் தவித்திட,

தொலைவில் நீ இருந்தும்
என் அருகிலே உந்தன் வாசம்;
மௌனங்கள் கூட
உன் பெயரை உச்சரிக்கவே.

உறைந்த நிமிடங்களில்
உன் வரிவடிவமே
அகத்தினுள்
அழியாத ஓவியத் தீற்றலாய்,
அழகான காதல் ஓவியம்.



தூரங்கள் கடந்தாலும்,
துடிக்கும் ஜீவனோடு
கலந்திடவே,
உன் நேசத்தைச் சுவாசித்து
நித்தமும் வாழ்கிறேன்.

கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

தொலைதூரப் பயணத்தில்
வலிக்காத கால்கள்
இன்னும் சற்று தொலைவுதான்
எனும் வார்த்தையில்
வலித்து விடுகின்றன



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# உன்னையே நீயறிவாய்!

உலகை வெல்வதற்கு
உன்னை உணர்தலே
முதற்படியாம்!

உன்னையே நீயறிய
உள்ளம் சொல்வதை
உன்னிப்பாய்க் கேள்!

உண்மையான முகம்
உனக்குப் புலப்படும்!
உன்பலம் பலவீனங்களை
உனக்கு உணர்த்திவிடும்!

காயங்களைச் சுமந்தவனே
வியத்தகு சாதனைகளால்
பெயரும் புகழும்
பெறுகின்றான் பின்னாளில்!

பிறர் பார்வையில்
உன்னைத் தேடாதே!.
வானமே எல்லையென்று
துணிந்து பறந்திடு!

பலவீனத்தை ஏற்றலே
பலத்தின் முதற்படியாம்!
உனது செயல்களால்
உலகம் உன்பேர் சொல்லும்!



விழுந்தவுடன் எழுந்திரு!
விதையாய்ப் புதைந்திடு!
தன்னம்பிக்கை உளிகொண்டு
உன்னை நீயே செதுக்கிடு!

இன்று புதிதாய்ப்
பிறந்தோம் என்று
ஒவ்வொரு விடியலிலும்
உணர்ந்து செயல்படு!


எண்ணத்தில் திண்ணமாய்
என்றும் முயன்றிடு!
எண்ணியது ஒருநாள்
ஈடேறும் நிச்சயமாய்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# பிரிவெனும் தீயில் விழாத சொந்தம்

இதயத்தில் இணைந்து,
இன்பத்தில் திளைத்து,
உதயத்தின் ஆதவனாய்
உடலினில் தீண்டும்.

நெஞ்சமெனும் சோலையில்
நேசமான மலர்களாய்,
வஞ்சமின்றித் தோழனாய்
வாசமாய் வீசிடுமே.



பேதம் இன்றி
பெருமை கொள்ளும்
வேதம் வகுத்த
வேட்கையான பாசம்.

பிரியம் பிடிக்கும்
பிணைந்த கயிறாய்,
அறிதாரம் அற்ற
அழகான காதல்.

எதிர்ப்புகள் எண்ணற்ற
எழுந்து வந்தாலும்,
தகர்த்து கரம் பிடிக்கும்
தைரியமான வரம்.

பிரிவெனும் தீயில்
விழாத சொந்தம்,
பிறை நிலாவாய்
பிரகாசமாய் ஒளிரும்.

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

# காமராசர்

இறைவன் படைப்பில்
இவரும்ஓர் அதிசயம்.
படிக்காத மேதையாய்
படிக்கவைத்த பெருமையே.

பள்ளிகளை நிறையவே
திறந்துவைத்த முதல்வராய்.
ஏழையாய் இருந்தவர்
ஏழைக்காக உழைத்தவர்.

தமிழகத்தை உயர்த்திட
ஆலைகளை நிறுவினார்.
மதியஉணவைத் தந்தவர்
படிக்கச்சொல்லி வைத்தவர்.

ஆறுகளின் நீரையே
தேக்கிவைக்க முனைந்ததால்.
அணைகளைத்தான் கட்டினார்
அனைவருமே போற்றினர்.

உணவுதரும் தொழிலையே
உயிர்கொடுத்து வளர்த்தவர்.
சுயநலத்தை துறந்தவர்
பொதுநலமாய் வாழ்ந்தவர்.

அண்ணல்போல இருந்தவர்
தலைவராக உயர்ந்தவர்.
மதிப்புமிகாக பதவியை
பிறருக்காக கொடுத்தவர்.



சொத்தில்லா தலைவராய்
சொந்தமோடு நேர்மையாய்.
வாழ்ந்தவரே காமராசர்
காலம்போற்றும் தியாகியே!

நாட்டுக்காக உழைத்தவர்
சிறைச்சாலை சென்றவர்.
தேசமக்கள் அனைவரும்
தேர்ந்தெடுத்த தலைமையாய்.

காங்கிரஸ்இயக்கம் கண்டவர்.
அந்நியஆட்சியை ஒழித்தவர்.
கர்மவீரராய் திகழ்ந்தவர்
காலம்போற்றும் தலைவரே!


உறவுகளை அருகிலே
சேர்க்கவில்லை மனதிலே.
கல்விக்கடவுள் போலவே
காமராசர் வாழ்கவே!

கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன், உடுமலைப்பேட்டை

செல்வம் மட்டும்
வாழ்க்கையில்
உவகை கொடுத்துவிடாது;
எல்லாப் பிரச்சினைகளையும்
தீர்த்துவிட முடியாது
என்று சொல்லவும்
பணம் உள்ளவனாக

யோசிப்புக்கும்
விளைவாய்,
நல்ல கருத்துக்கும்
ஆலோசனைகளுக்கும்
ஏட்டுப் படிப்பு
கட்டாயமில்லை
என்று சொல்ல
படித்தவனாக

இயலாதவருக்கு
செய்யும் உதவிகள்
இறைவனை
மகிழ்விக்கும்
என்று சொல்லவும்
மனிதாபிமானத்துடன்
பரிச்சயம்
உள்ளவனாக



புதியவை
தெரிந்துகொள்ளவும்,
கல்வி கற்கவும்
வயது தடையில்லை
என்று சொல்லவும்
அதை நோக்கிப்
பயணப்பட்டவனாக

இருக்க வேண்டும்,

பிறரால் ஏற்றுக்
கொள்ளப்பட.

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# சேலம் எட்டுப்பேட்டை மாரியம்மன்

## கோவில்களின் ஆடி மாதச் சிறப்புகள்

ஆடி மாதம் அன்னை மாரியம்மன் வழிபாட்டிற்கு மிகவும் உகந்த புனிதமான மாதமாகக் கருதப்படுகிறது. இம்மாதத்தில் அன்னை ஆதிபராசக்தியின் அருள் சக்தி அதிகமாக வெளிப்படுகிறது என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும். ஆடிப்பூரம் ஆண்டாள் அவதரித்த திருநாளாகவும் சிறப்புப் பெறுகிறது. ஆடி மாதத்தில் அம்மனை மனமுருகி வழிபட்டால் மன அமைதி, உடல்நலம், குடும்ப நலம் மற்றும் வாழ்வில் வளம் கிடைக்கும் என்று பக்தர்கள் நம்புகின்றனர்.



வேப்பிலை அன்னை மாரியம்மனுக்கு மிகவும் உகந்ததாகக் கருதப்படுகிறது. வேதனைகளைப் போக்கி, வேண்டுதல்களை நிறைவேற்றி, வினைகளை விலக்குபவளாக அன்னை "வேப்பிலைக்காரி" என்று போற்றப்படுகிறாள். வேப்பிலை கட்டுதல், வேப்பிலையால் ஆடை அணிந்து ஆலயத்தை வலம் வருதல் போன்ற வழிபாட்டு முறைகள் தொன்றுதொட்டு கடைப்பிடிக்கப்படுகின்றன.

ஆடி மாதத் திருவிழாவின் தொடக்க நிகழ்வாக நடைபெறும் **பூச்சாட்டுதல்** மிகப் பழமையான ஐதீகமாகும். பலவண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அம்மனை தரிசிப்பதும், அரளிப்பூவால் அர்ச்சனை செய்வதும் சிறப்புடைய வழிபாடாகும். ராகு காலத்தில் எலுமிச்சை விளக்கேற்றி மனமுருகி வேண்டினால் நினைத்த வரங்கள் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும்.

ஆடி செவ்வாய் மற்றும் ஆடி வெள்ளிக்கிழமைகள் அம்மன் வழிபாட்டிற்கு மிகவும் சிறப்புடைய நாட்களாகும். இந்நாட்களில் விளக்கேற்றி வழிபடும் பக்தர்களின் வேண்டுதல்களை அன்னை ஆதிபராசக்தி நிறைவேற்றுவாள்

கவிஞர் மா. நந்தினி, சேலம்

திரிசூலம் அன்னை மாரியம்மனின் தெய்வீக ஆயுதமாகும். அது தீய சக்திகளை அழித்து பக்தர்களைக் காக்கும் அருள் சின்னமாக விளங்குகிறது. தங்கக் கவசம், வெள்ளிக் கவசம், மலர் அலங்காரம் மற்றும் சிங்க வாகனத்தில் திருவீதியுலா வரும் அம்மனை தரிசிப்பது பக்தர்களுக்கு அரிய பாக்கியமாகும்.

சேலம் கோட்டை மாரியம்மன் கோவிலும், எட்டுப்பேட்டை மாரியம்மன் கோவில்களும் தொன்மையான ஆன்மிக மரபுகளைப் பேணிவருகின்றன. கோட்டை மாரியம்மன் பூச்சாட்டுத் திருவிழாவின் போது, எட்டுப்பேட்டை மாரியம்மன் கோவில்களிலிருந்து மலர்களை எடுத்துச் சென்று சமர்ப்பிப்பது இன்றளவும் தொடரும் சிறப்பான ஐதீகமாகும்.

எட்டுப்பேட்டை மாரியம்மன் கோவில்களில் ஒவ்வொன்றும் தனித்துவமான திருவிழா மரபுகளைக் கொண்டுள்ளன. செவ்வாய்பேட்டை மாரியம்மன் கோவிலில் தேர் திருவிழா, குகை மாரியம்மன் கோவிலில் வண்டி வேடிக்கை, அம்மாபேட்டை பலப்பட்டறை மற்றும் சஞ்சீவிராயப்பேட்டை மாரியம்மன் கோவில்களில் குண்டம், பொன்னம்மாபேட்டை மாரியம்மன் கோவிலில் சக்தி அழைப்பு, குமரசாமிப்பட்டி மாரியம்மன் கோவிலில் கம்பம் நடுதல் ஆகியவை பக்தர்களை ஈர்க்கும் முக்கிய நிகழ்வுகளாக நடைபெறுகின்றன.

சேலம் எட்டுப்பேட்டை மாரியம்மன் கோவில்கள் பக்தி, பாரம்பரியம் மற்றும் ஆன்மிக மரபின் அடையாளங்களாகத் திகழ்கின்றன. ஆடி மாதத்தில் அன்னை மாரியம்மனை பக்தியுடன் வழிபடுவோருக்கு சகல சௌபாக்கியங்களும், இறையருளும் கிட்டும் என்பது பக்தர்களின் உறுதியான நம்பிக்கையாகும்.

ஓம் சக்தி! பராசக்தி! அன்னை மாரியம்மன் திருவருள் அனைவரையும் என்றும் காக்கட்டும்!

கவிஞர் மா. நந்தினி, சேலம்

அத்தியாயம்-2

ஸ்டுடியோவில் ஷூட்டிங்
(திகில் நவீனம்)

டயை வேலைக்காரன் கொண்டு வைத்து விட்டுப் போக, எடுத்து ராஜனுக்கும் மதனுக்கும் பரிமாறிய ஷில்பா, "அடுத்தத் திட்டம் என்ன?" என்று கேட்டாள். "மதன் லால், முதலில் நாம் அவனை மாடலிங்குக்குத் தான் அழைத்திருக்கிறோம் என்று நம்ப வைக்க வேண்டும். அந்தேரியிலுள்ள நமது ஸ்டுடியோவில் ஏதாவது ஒரு துணிக்கு விளம்பரமாக நிற்க விட்டு ஷூட்டிங் எடுக்க வேண்டும்" என்றார் ராஜன் லால்.




"அப்புறம்"? , "நாளை மறுநாள் மாஜிஸ்திரேட் முன்னால் இவனை நிறுத்தி சுரேஷ்தேவைப் போல கையெழுத்திட சொல்ல வேண்டும்."
"அதையும் ஷூட்டிங்கிற்கு ஒத்துகை என்றே சொல்லி விடலாம்"

"அது கூட சரிதான். இவன் சுரேஷ்தேவ் மாதிரி கையெழுத்திட்ட மறு நிமிடமே அவனுடைய சமஸ்தான கஜானாவின் பொருட்கள் ஏலம் விட்டத் தொகை வரி போக பதினோரு கோடி ரூபாயை மாஜிஸ்திரேட் இவனிடம் கொடுப்பார்."
"அதை நாம் வாங்கிக் கொண்டு உன் மாடலிங் நடிப்பிற்கு கூலி என்று சொல்லி ரூபாய் பத்தாயிரத்தை இவனுக்கு தூக்கியடித்து விட்டு மீதியை அப்படியே அபகரித்துக் கொள்ள வேண்டும்" என்று சிரித்தான் மாதன் லால்.

"சிரிப்பெல்லாம் இருக்கட்டும். இவனுக்கு இந்தி தெரியாது. மாஜிஸ்திரேட் ஏடா கூடமாக ஏதாவது கேள்வி கேட்டால் இவன் பேய் முழி முழுக்கப் போகிறான். அப்புறம் நம்முடைய பிளான் முழுக்க அம்பேல்" என்றாள் ஷில்பா.

அத்தியாயம்-2

ஸ்டுடியோவில் ஷூட்டிங்

(திகில் நவீனம்)

"அதெல்லாம் நம்ம வக்கில் பாத்துக் கொள்வார் கவலைப் படாதே"
"அவசரப்பட்டு சுரேஷ் தேவைக் கொன்றிருக்க வேண்டாம் மதன் லால்"
"ராஜன் நடந்ததைப் பற்றி பேசி பிரயோஜனமில்லல். அவனை புதைக்கவோ எரிக்கவோ செய்திருந்தால் நமக்கு கால் காசு கூட கிடைக்காமல் போயிடும் என்று தான் எங்கள் வீட்டு ஃப்ரிஸரிலேயே இன்னும் போட்டு வைத்திருக்கிறேன்"

"டோண்ட் ஒரி, பணம் கைக்கு வந்ததும் அவனை நம்முடைய பாக்டரி பர்னரிலே தூக்கி எறிந்து விடலாம்"
"சரி. அப்படியென்றால் நாளைக்கு ஏதாவது சிறிய விளம்பர படத்துக்கு ஏற்பாடு செய்து ஷூட்டிங் ஆரம்பிக்கச் சொல்லு" என்றார் மதன்லால்.

"நம்முடைய மபத்லால் சர்ட்டிங் ஷூட்டிங் விளம்பரத்திற்கு வர வேண்டிய ஜாக்கி கானும் பாபியும் சிங்கப்பூர் போய் விட்டார்கள்."

"அதற்கென்ன. இந்த தினேஷையும் நம்முடைய ஷில்பாவையும் நடிக்க வைத்து முடித்து விடேன். என்ன ஷில்பா உனக்கு விருப்பம் தானே"?
"கரும்பு தின்ன கூலியா ராஜன்" ?
"அது சரி"!?
@@@@@@@@@@@@@@@@@@@@@@@@
மறுநாள் அந்தேரியிலிருந்து அந்த ஸ்டுடியோவில் மபத்லால் சூட்டிங் ஷர்ட்டிங் விளம்பரப் படத்திற்கான ஷூட்டிங் ஆரம்பித்தது. தினேஷ் மற்றும் ஷில்பா இருவரும் மேக்கப் போட்டுக் கொண்டிருந்தார்கள். என்ன வசனம் பேச வேண்டும் என்பதை ஆங்கிலத்தில் இந்தியை மாற்றிக் கொடுத்து படிக்கச் சொன்னான் ஒரு அரைகுறை டைரக்டர்.

ஷூட்டிங் எப்படி நடக்கிறது என்று பார்க்க வந்த ராஜன்லாலைக் கவனித்த தினேஷ் மேக்கப் மேனை விலக்கி விட்டு வந்து "சார் உங்களிடம் ஒரு நிமிடம் தனியாக பேச வேண்டும்" என்றான் ஆங்கிலத்தில்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

அத்தியாயம்-2

## ஸ்டுடியோவில் ஷூட்டிங் (திகில் நவீனம்)

"நான் கொஞ்சம் பிஸியாக இருக்கிறேன். அப்புறம் பேசலாமே"?
"கொஞ்சம் சீரியஸான விஷயம் சார்", "சரி சொல்லு"
"இங்கே வேண்டாம் என்று நினைக்கிறேன." திரும்பிப் பார்த்து ஷில்பாவின் பார்வையைத் தவிர்த்துக் கொண்டு சொன்னான்.
"சரி வா".... இருவரும் ஒதுங்கியிருந்த காண்டினில் ஆளுக்கொரு பெப்ஸி வாங்கிக் கொண்டதும் "இப்போ சொல்" என்றார்ராஜன்லால்.

"நீங்களும் மதன்லாலும் சேர்ந்து சுரேஷ்தேவ் என்கிற பழைய சமஸ்தான இளவரசனை கொன்று புதைக்காமல் குளிர் பெட்டியில் வைத்திருப்பது உண்மையா?"
முதலில் பயம் ஏற்பட்டாலும் அதை மறைத்துக் கொண்டு "என்ன நான் சென்ஸ். யார் சொன்னது உனக்கு இதெல்லாம்..." என்றார் கோபத்தோடு.

"சுரேஷ்தேவ் முகச் சாடையில் இருக்கின்ற என்னை அழைத்து ஜட்ஜ் முன்னால் நிறுத்தி அவனைப் போல கையெழுத்தைப் போடச் சொல்லி அவன் பணம் பதினோரு கோடி ரூபாயையும் அபகரித்துக் கொள்ளப் போகிறீர்களா?"
"தினேஷ், நீ நிறைய கற்பனை பண்ணியிருக்கிறாய் என்று நினைக்கிறேன்"

"நான் கேள்விப் பட்டதை நீங்கள் கனவு என்கிறீர்கள். நான் கற்பனை செய்ய வில்லை. மிஸ்டர் ராஜன். அப்படியென்றால் ஷில்பா சொன்னது அவள் சொந்த கற்பனையா?"
"ஷில்பா சொன்னதா?.... என்று கடகடவென்று சிரித்தார் ராஜன் லால் .
"ஏன் சிரிக்கிறீர்கள்"
"உங்களை வைத்து இரட்டை வேடத்தில் ஒரு படம் தயாரிப்பதற்கு கதை டிஸ்கஸன் பண்ணிக்கொண்டிருந்தேன். அதிலே முதல் நாள் ஷூட்டிங் ஜட்ஜ் முன்னால் நீங்கள் இன்னொரு சுரேஷ்தேவ் போல கையெழுத்து போட்டு போலி நோட்டுகளை வாங்குவது போல காட்சியமைத்திருக்கிறோம்"
"நீங்கள் இருவரும் என்னை வைத்து ஏமாற்றி பணம் சம்பாதிக்க போவதாக

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

ஷில்பா சொன்னது..."

"அவள் அரை குறையாகக் கேட்பதன் விளைவு தான் இது. டோன்ட் டேக் இன் ராங் வே"

"நாளைக்கு ஷூட்டிங்கில் நடிப்பதற்கு இரவு வந்து டைரக்டர் விவரமாக விளக்கிச் சொல்லி விட்டுப் போவான். தயாராக இருந்து கொள்ளுங்கள்"

"ஓ.கே.சார்"
"ஷில்பா கதை டிஸ்கஸனில் முழுவதும் கலந்து கொள்ளாததுதான் காரணம். அவள் கற்பனையைக் கலந்து உங்களைப் பயமுறுத்தியிருக்கிறாள். டோன்ட் ஒரி"

"சரி சார்"




தொடரும்...

# கா சுப்பிரமணியம் பிள்ளை

கட்டுரை

திருநெல்வேலியில், காந்திமதிநாத பிள்ளை-மீனாட்சியம்மை தம்பதியருக்கு 1888ம் ஆண்டு நவம்பர் 5ம் தேதி பிறந்தவர் கா.சுப்பிரமணிய பிள்ளை.

## கல்வி

திருநெல்வேலியில் திண்ணைப் பள்ளியில் தொடக்கக் கல்வி. 1906ஆம் ஆண்டில் மெட்ரிக்குலேசன் தேர்வில் சென்னை மாகாணத்திலேயே முதல் மாணவராகத் தேறினார்.



1908ஆம் ஆண்டில் சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் பயின்று கலை உறுப்பினர் (Fellow of Arts), அதேவேளையில் மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய புலவர் தேர்வில் முதல் மாணவராக வெற்றி பெற்றார்.

கா.சு.பிள்ளை 1,000 பக்கங்கள் கொண்ட புத்தகத்தைக் கூட சில மணி நேரங்களில் படித்து முடித்து விடுவாராம். எதையும் ஒரு தடவை படித்து விட்டால், அதை நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்வாராம்.
மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வில் முதல் மாணவராக வந்து பரிசு பெற்றார். 1910ல் பி.ஏ. (வரலாறு) பட்டம், 1913ல் ஆங்கிலத்திலும், 1914ல் தமிழிலும் எம்.ஏ.பட்டம். பின்னர் 1917ல் எம்.எல்.பட்டம். சென்னை சட்டக் கல்லூரியில் 1919 முதல் 1927 வரை விரிவுரையாளராகவும் சட்டப் பேராசிரியராகவும் பணி. 1929-30ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராக பணி.

1937-38ல் கா.சு.பிள்ளை, பழந்தமிழ் நாகரிகம் அல்லது பொருளதிகாரக் கருத்து என்ற சிறந்த ஆராய்ச்சி நூலும், வானநூலும் எழுதி முடித்தார்.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

1940ல் திருநெல்வேலியில் நடைபெற்ற சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கக் கூட்டத்தில் கா.சு.பிள்ளைக்கு பல்கலைப் புலவர் என்ற பட்டம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. அதே ஆண்டு செட்டிநாடு இளவரசர் மு.அ.முத்தையா செட்டியார் செப்புப் பட்டயம் வழங்கினார்.

பின்னர் 1940ல் மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியேற்றார். தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர் பல்துறைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார்.

ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதி, தமிழ் இலக்கியத்திற்கும், சமயத் துறைக்கும், சட்டத் துறைக்கும் சிறப்பாக தொண்டாற்றிய இவரது படைப்புகளை வரலாற்று நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், சமய நூல்கள், அறிவுச்சுடர் நூல்கள், கலை நூல்கள், கதைகள், பதிப்பு நூல்கள், ஆங்கில மொழிபெயர்ப்புகள், ஆங்கில நூல்கள், சட்ட நூல்கள், கட்டுரைகள் எனப் பிரிக்கலாம்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் வரலாறு, சேக்கிழார் சரிதமும் பெரிய புராண ஆராய்ச்சியும். இந்து சமயங்களின் சுருக்க வரலாறு, திருநான்மறை விளக்கம், முருகன் பெருமை, சைவச்சடங்கு விளக்கம், மெய்கண்ட நூல்களின் உரைநடை போன்றவை இவரின் சிறந்த படைப்புகளாகும்.

கலப்புத் திருமணம்; கைம்பெண் மறுமணம்; ஆண்களைப்போலவே பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை; தமிழ்நாட்டில் தமிழ்மொழி ஒன்றே கட்டாயப் பயிற்றுமொழி; தமிழிலேயே கடவுள் வழிபாடு; தமிழிலேயே சமயச் சடங்குகள் போன்றவற்றை வலியுறுத்தினார். கோயில்களிலும் மடங்களிலும் முடங்கிக் கிடக்கும் பொருட்களை ஏழைகளின் கல்வி நலனுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

# கா சுப்பிரமணியம் பிள்ளை

கட்டுரை

‘பல்கலைப் புலவர்’, ‘பைந்தமிழ்க் காசு’ எனப் புகழ்ப்பெற்ற கா.சு.பிள்ளை, தனது வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவே தொண்டாற்றினார். தமிழின் கருவூலமாகவும், சைவத்தின் திருவுருவமாகவும் விளங்கிய கா.சு.பிள்ளை தம்முடைய 56வது வயதில் 1945-ம் ஆண்டு ஏப்ரல் 30-ம் தேதி இறையடி சேர்ந்தார்.



நன்றி
https://mutiru-tamilpani.blogspot.com
விகடன்

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

நாளை

# நமதே

## தலைக்கனத்தை
## இறக்கி வைத்தால் மட்டுமே,
## வெற்றி எனும் உயரத்தை
## உன்னால் எட்ட முடியும்

**அகர முதல இலக்கியப் பேரவை**

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com